1993 மார்ச் 19]

பற்றி உரிமையாகக் கேட்கக் கூடாது. (குறுக்கீடு) நீங்கள் என்னிடத்திலே ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொன்ன போது, இதையெல்லாம் நீங்கள் பேசுகிறபோது பேசலாம் என்று என்னுடைய அறையிலே சொல்லி அனுப்பியிருக்கிறேன். நீங்கள் அதை இங்கே வந்து கேட்பது முறையல்ல. (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு நான அறையிலேயே உங்களுக்கு விளக்கம் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு).

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் கொடுத்து இருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்த அறிவிப்புக்கு நான் பதில் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) என்னுடைய பதில் பெற்ற பிறகு அதுபற்றி இங்கே வந்து எழுப்பக்கூடாது. (குறுக்கீடு)

3. சிறப்புக் குறிப்பு

ரம்சான் பண்டிகையையொட்டி, கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி வழங்குதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் தண்டாயுதபாணி, பொன்னுசாமி, ஆர். சிங்காரம், சி. ஞானசேகரன், கே. செல்வராஜ் ஆகியோர் ரம்சான் பண்டிகையைப் பொறுத்தமட்டில் கைத்தறித் துணிகளுக்கு வழங்குகிற தள்ளுபடி நிறுத்தப்பட்டு இருப்பதைப் போல ஒரு தகவல் தெரிவித்து, அதை அவையில் எழுப்ப வேண்டுமென்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்களிடத்திலே இருந்து கிடைத்த விளக்கத்தின்படி அவ்வாறு, நீங்கள் சொல்வதைப் போல, ரம்சான் பண்டிகைக்கு இருந்த தள்ளுபடி ரத்து செய்யப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. பெ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் எந்தத் தகவலும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தண்டாயுதபாணி அவர்கள் அதுபற்றிய சிறு விளக்கத்தைக் கேட்கலாம்; அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்வார்கள்.

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 'Marketing Development Assistance' என்று சொல்லி மத்திய அரசாங்கம் 60 நாட்களும், மாநில அரசாங்கம் 40 நாட்களும் சேர்த்து 100 நாட்கள் கைத்தறித் துணிகளை தள்ளுபடியிலே விற்பனை செய்து, அதை ஊக்குவிக்கிறார்கள். காந்தி ஜெயந்தி, தீபாவளி, பொங்கல் போன்ற பல்வேறு பண்டிகைகளுக்கு தள்ளுபடியிலே விற்பனை செய்து வந்தார்கள். போன வருடம் ரம்சான் பண்டிகைக்கு இந்த மாதிரி சேர்த்து 5 நாட்கள் தள்ளுபடி மூலமாக விற்பனை செய்து கைத்தறியிலே லுங்கிகள் அதிகம் வாங்குகிற முஸ்லீம் சமுதாயத்திற்கு உதவி செய்தார்கள். ஆனால், இந்த ஆண்டு தள்ளுபடியிலே விற்பனை செய்வதற்கு வேண்டிய அந்த ஆணை இதுவரையிலே பிறப்பிக்கப்படவில்லை. பல ஊர்களிலே இருந்து முஸ்லீம் சமுதாயத்தினர் ரம்சானுக்கு தள்ளுபடியிலே விற்பனை செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்த காரணத்தினால், அந்த முறையில் மீண்டும் இந்த வருடமும் நீங்கள் தள்ளுபடியிலே விற்பனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரம்சான் பண்டிகையை முன்னிட்டு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று—ஆண்டுதோறும் தருவதைப் போல—என்று சொன்னார்கள். நான் இந்த அவைக்கு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவிக்க விரும்புகிறேன். ஈகை குணத்திற்குச் சொந்தக்காரர்—நபிகள் பெருமகனாருடைய தத்துவங்களை ஏற்றுக் கொண்ட, ஈகை குணத்திற்குச் சொந்தக்காரர்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இஸ்லாம் மதத்திலே இருக்கிற கருத்துக்களை, 'தல்லால் சலம்' சொன்ன கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, ஈகை குணத்தால் அனைவருக்கும் கருணை உள்ளத்தோடு—நேற்றைய தினம் கூட ஒரிரு போட்டுகள் கடலில் சென்று அமிழ்ந்து விட்டது என்று சொன்ன நேரத்தில்—ஈகை உள்ளத்தோடு நபிகள் பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொன்னார்களே அந்த வகையில் கருணையோடு நேற்றையதினம் 12 பேர்களுக்கு 36 லட்சம் ரூபாய் தந்தது மட்டுமல்லாமல், தான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும்—கருணை உள்ளத்தின் தலைவியாக இருக்கிற, தாயுள்ளத்தின் தலைவியாக இருக்கிற, மனித நேயத்தின் தலைவியாக

இருக்கிற, மனிதாபிமானத்தின் தலைவியாக இருக்கிற தலைவி, நான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாரி வழங்கியிருக்கிறார்.

முற்பகல் 10-05

அத்தகைய தாயுள்ளத்தின் தலைவியாக, இந்த நாட்டில் செங்கோல் ஒச்சுகிற நேரத்தில் இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த நண்பர்களும் சரி, அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களும் சரி பேணிக் காக்கப்படுவார்கள். நெசவாளர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்ற உறுதியினை இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ரம்சான் தள்ளுபடி 5 நாட்களுக்குத் தரப்படும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் தரப்படும் என்றுதான் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் தருவதுபோல 5 நாட்களுக்குத் தள்ளுபடி தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

4. ஒழுங்குப் பிரச்சினை.

காங்கிரஸ் கட்சிச் சின்னத்தில் வெற்றி பெற்ற இந்திய ஐக்கியப் பொதுவுடமைக் கட்சி உறுப்பினர் காங்கிரஸ் கட்சி கொறடாவின் அனுமதியின்றிப் பேசுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி நேற்றைய தொடர்ச்சியாக திரு. எஸ்.வி. சண்முகம் (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வி. சண்முகம் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் சின்னமான கைச் சின்னத்தில் நின்று போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.